# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2018.09.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# இரசாயன ஆயுதங்கள் சமவாயம் (திருத்தம்)

**2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

*__வாசகம் 2__: இவ்வாசகமானது, 2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இச்சட்டத்தின் அமுலாக்கம் பொறுப்பிக்கப்படவேண்டியவரான அமைச்சரின் பதவித்துறையினை மாற்றுவதற்கானதுமாகும்.*

## இரசாயன ஆயுதங்கள் சமவாயம் (திருத்தம்)

ச.வ.- ஓ 23/2018

**2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2007 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**2.** இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இரசாயன ஆயுதங்கள் சமவாயச் சட்டத்தின் 6 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் "வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.